RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20315

# திருமூலரின் திருமந்திரத் திருவருட் காட்சி

இரா. தண்டபாணி [அ,*], கு. வெங்கடேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, காஞ்சி ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கீழம்பி, காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா.

# Thirumoolarin Thirumanthira Thiruvarutkaatchi

R. Dhandapani [a,*], K. Venkatesan [a]

[a] Department of Tamil, Kanchi Sri Krishna Arts & Science College, Keezhembi, Kancheepuram – 631 502, Tamil Nadu, India.

Corresponding Author:
tamilpani79@gmail.com

Received : 11-03-2020
Accepted : 03-05-2020

## ABSTRACT

This article looks at the various street game of the lord through the thirumandra Thiruvarut scenario. The essence of this article is to know the greatness of Siva, Siddhu, Siddhu games through Thirumanthiram. Through this article, the Principles of the life Style, Yoga, Ethical, and Piety which Thirumoolar illustrates through three thousand songs are researched. Thirumoolar's Thirumandhiram (Patham Thirumurai) is a part of Panniru Thirumurai. This book includes many divine play of Lord Shiva and divine appearance of god to his devotees. A review of this book reveals the spiritual faith of Thirumoolar in Lord Shiva. The aim of this paper is to tell about spiritualism of Thirumoolar and his extreme belief in the mantra "OM NAMA SHIVAYA" to blend his soul with the supreme power. In Thirumanthiram, Thirumoolar has mentioned about Shivam, Bhathi, Yoga, Meditation, Shakthi in human physiology, Maya, Prayers, Belief in god, method of worshipping god. He categorized all these characteristics into science, psychology, spiritualism and exchange of soul from one body to another. he explained the presence of Lord Shiva in living and non-living things, blending of spiritualism with psychology, attitude of human beings towards spiritualism. Thirumanthiram insisted that the great five letters mantra "OM NAMA SHIVAYA" covers the entire universe with love and affection of Lord Shiva.

**Keywords:** Thirumanthiram, Thirumoolar, Shivam, Bhathi, Yoga, Meditation

## ஆசிரியர் குறிப்பு



இவர், இந்தியா, தமிழ்நாடு, திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், வெங்கிளி கிராமத்தைச் சேர்ந்தவர். சென்னை கிழக்குக் கல்வி மாவட்டம், பழைய வண்ணையில் P.A.K. பழனிச்சாமி மே.நி. பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். தன் மாணவர்களைத் திறன்படுத்தி பேச்சு, பாட்டு, கவிதை, கட்டுரை என 3000-ற்கு மேற்பட்ட விருதுகள், பரிசுகள், சுழற் கேடயங்கள் பணமுடிப்புகளைப் பெற்றுள்ளார். டுடே நாளிதழ் சார்பில்

சென்னைப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் தாண்டவன் அவர்களின் திருக்கரங்களால் "சீர்மிகு தமிழாசிரியர்" விருதைப் பெற்றுள்ளார்.

## முன்னுரை

உலகுள்ளிட்ட பல்யுக, எண்ணில்லாக் கோள்களின் இயக்கமாக, ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், விளையாட்டு, சோதித்தல், மாயையை உணர்த்துதல், மெய்ஞானம், அஞ்ஞானம், என்னும் கூறுகளின் உயிர்ப்பாக, உணர்வாகத் திகழ்வது பரம்பொருள். இப்பரம் பொருளானது, வரலாற்றுத் தொன்மையானது “சைவம்” என்பர் வரலாற்றாளர். சைவத்தினையும், சிவத்தினையும் 'பன்னிரு திருமுறைகள்' தெளிவாக்குகின்றன. இதில் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் பரம்பொருளின் திருவருட் காட்சிகளை சற்றேனும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

## திருமூலரும் திருமந்திரமும்

எட்டு வகையான சித்து விளையாட்டுக்களை நிகழ்த்திடும் சிவதீக்கைப் பெற்றவர் திருமூலர் திருக்கயிலாயத்தில் திருநந்தியின் திருவருட்பெற்றவர் என்பர். இவர் ஆண்டுக்கு ஒரு பாடல் விதம் "சிவயோகத்தில் மூவாயிரம் ஆண்டுகள் மூவாயிரம் பாடல்களைப் பாடினார்" என்பது வரலாறு. சிலபதிப்புகள் 3046 பாடல்கள் (பன்னிரு.பக் 711) எனவும், 2998 பாடல்கள் என்றும் கூறும் நிலையில் 2998 பாடல்களையேச் சான்றாகக் கொண்டு இத்திருமந்திரத்தின் திருவருட் காட்சியை இக்கட்டுரை ஆராய்கிறது (Sa.Ve.Subramaniyan, 2015; Devira, 2007)

## திருமந்திரமும்-பன்னிருதிருமுறையும்

சைவத்திருமுறைகளைத் தோத்திர நூல்களாயும், சாத்திர நூல்களாயும் இருவகைப் பகுப்பர். இதில் திருமந்திரம் சற்று மாறுபட்டு வாழ்வியல், தத்துவம், ஆன்மம், எட்டுவகை சித்திகள், உயிர்கள் இறைநிலை அடையும் வழிகள். ஐந்தெழுத்தாகிய "நம(ச்)சிவாய"த்தினை ஏனைய பிற திருமுறைகளில் இருந்து, தனக்கே உரிய பாணியில் சிவம்-சைவம்-பதி,பசு,பாசம் ஆகியனவற்றை மிகச் சரியாக, தெளிவாகத் தத்தம் பாடலில் விளக்குவதைக் காண முடிகிறது. கற்பிக்கப்பட்ட சமயங்கள் புறப்புற சமயங்கள், அகப்புற சமயங்கள், வியாபிக்கப் பட்ட சமயங்கள் என்று பகுத்துப் பார்க்கும் இக்கால ஆராய்ச்சியில் உலகையும், உயிர்களையும் படைத்து உணர்தலில் இறைவனை உணர்த்திடவே

**"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்"**

என்கிறார் திருமூலர். 58. தலைப்புகளில் (கடவுள் வாழ்த்து முதலாக திருவம்பலச் சக்கரம் ஈறாக) 2998 பாடல்களை இயற்றியுள்ளதைக் காண முடிகிறது (Balasubramaniyan, 1959; Balur Th. Kannappar, 2012).

## ஒன்றும் - பலவும்

அனைத்தும் ஒன்றாக அந்த ஒன்றே பலவாகி, பல வடிவங்களாக, ஒலி-ஒளியாக உள்நின்று திருவருட்பேற்றினைத் தருவது **என்பதை**,

**"ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன்னருள**
**நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து** (பன்னிரு மே.பக்.773 பா:01)

எனப் பாடுவதிலிருந்து இப்பேருலகிற்கு ஒருவன் தேவன்-தலைமகன்-இறைவன் ஒருவரே அவ்விறைவன் ஈசன் என்பதே புலனாகிறது.

**"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"** [மே.நூ.ப 773-பா 07)

என்றும்,

**"தீவினும் வெய்யன் புனலினும் தண்ணியன்**
**ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை"** (மே.நூ.ப 773-பா 07)

எனவும்,

**"தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்**
**தானே சுடும் அங்கு, ஞாயிறும் திங்களும்"** (மே.நூ.ப 773-பா 09)

எனப்பாடுவதிலிருந்து எல்லாமுமாக உருவாக்கி திருவருள் தருபவர் சிவபெருமான் என்பதை உய்த்துணர முடிகிறது.

## வடிவக்கூறுகளில் திருக்காட்சி

**"ஆதியுமாய் அரனாய், உடனுள் நின்ற**
**வேதியுமாய் இருந்தான், திருந்து ஆரருள்**
**சோதியுமாய் சுருங்காதது ஓர் தன்மையுள்**
**நீதியும் ஆய், நித்தம் ஆகி நின்றானே"** (மே.நூ.ப 773-பா 14)

என்று திருமூலர் பாடுவதிலிருந்து வடிவங்களாயும், வடிவமில்லாமலும், உயிருள்ள, உயிரற்றப் பொருட்களுமாய் இறைவன் திருக்காட்சியளிப்பதை உய்த்துணர முடிகிறது.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே."** (மே.நூ.ப 773-பா 63)

எனப்பாடுவதின் வழியே எழுத்துக்களின் ஒலி-ஒளியாக திருக்காட்சித் தருகிறார் ஈசன் என்பதை தெளிவுபடுத்துகிறார்

**"தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல் "** (மே.நூ.ப 780-பா 137-1-2)

எனவும்,

**"ஊனாய், உயிராய், உணர்வு - அங்கியாய், முன்னர்**
**சேணாய் வான் ஓங்கி, திருஉருவே அண்டத்**
**தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்து**
**ஆள் முழுது அண்டமும் ஆக நின்றானே"** (மே.நூ.ப 782-பா 179)

என்று பாடுவதில் மூலம் அனைத்து வடிவக் கூறுகளிலும் நீக்கமற நின்றும், பல்வகையான கோள்கள், பேரண்டமுமாக திருக்காட்சித் தருகிறார் முக்கண்ணன் என்பது புலனாகிறது.

## படைப்பும்-அருளும்

உலகினைப் படைத்து அருளும் பரமனையும் சத்தியையும்

**"புவனம் படைப்பார், ஒருவன் ஒருத்தி"** (மே.நூ.ப 783-பா 197)

**"புகுந்து அறிவான் புவனாபதி அண்ணல்"** (மே.நூ.ப 783-பா 208)

என்பதிலிருந்து மூன்று தேவர் உள்ளிட்ட இறைவன்கள் முதற்கொண்டு பேரண்டம், அண்டவெளிக் கோள்களையும் உயிர்ப்பித்து இயக்கச் செய்வது அவ்வியக்கத்தில்

**"உண்டு உலகு எழும் உமிழ்ந்தான் உடன் ஆகி**
**அண்டத்து அமரர் தலைவனும் ஆதியும்"** (மே.நூ.ப 783-பா 200)

சிவபெருமான் என்பதை மெய்யுறுத்துகிறார்.

**"ஒருவனுமே உலகு ஏழும்படைத்தான்**
**ஒருவனுமே உலகு ஏழும் அளந்தான்**
**ஒருவனுமே உலகு ஏழும் கடந்தான்**
**ஒருவனுமே உடலோடு உயிர்தானே"** (மே.நூ.ப 783-பா 214)

என்னும் கூற்றானது இந்த உலகினுக்குப் பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான். அது "சிவன்" என்னும் பரம்பொருளே விதையாக நின்று ஈரேழு உலகினையும் உருவாக்கி காத்தருளுகிறார். நீரானது, மேகமாக இருந்து மழைத்துளியாகி, பல மழைத்துளிகள் ஒன்றெனக் கலந்து நீராகி ஓடி, தான் நிற்கும் இடம், ஓடுமிடங்களைக் கொண்டு மழைத்துளியின் வடிவம் மாற்றமடைவதைப் போன்று உலகாயத்தின் ஒரே ஒரு பரம்பொருள், அன்பினனான சிவபெருமான், மாயாசத்திகளைக் கடந்து, தத்தம் மனிதர்கள் என்னும் வடிவக் கூறுகளாகக் காட்சித் தந்து இவ்வுலகாயத்தைப் படைத்தும்-அருளியும் சுழற்சியாக இயங்குவதையும் - அறிவியல் யுக ஒப்பீட்டோடு விளக்குவதை உணர்ந்தறிய முடிகிறது. **இதனை**,

**"படைத்து உடையான் பண்டு உலகங்கள் ஏழும்**
**படைத்து உடையான் பல தேவரை முன்னே**
**படைத்து உடையவான் பல சீவரை முன்னே**
**படைத்து உடையான் பரம் ஆகி நின்றானே"** (மே.நூ.ப 786-பா 255)

அப்படி நின்று எல்லாமுமாகத் திருக்காட்சியளித்து, படைத்து

**"பிரானாரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம்**
**பிரானாரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம்**
**பிரானாரு ளிற்பெருந் தன்மைய மாகும்.**
**பிரானாரு ளாற்பெருந் தெய்வமு மாமே"** (மே.நூ.ப 862-பா 1629)

என உரைப்பதின் வழியே தேவர், கோள்கள், உலகாயம், மனிதர், பல்லுயிரிகள் என எல்லாவற்றையும் படைத்து, காத்து, அவற்றில் மாயா, சித்து, அசித்து, உணர்தல், நினைந்தல்,

பதினெட்டு மெய்ப்பாட்டு இயக்கம், பல்வகையான குணங்கள், பத்தி, பதிதல், பணிவு, அன்பு என்ற பகுப்புகளாகக் காட்சியளிப்பது பரம்பொருளான பரமசிவனே என்பது தெளிவாகிறது.

## திருமந்திரம் கூறும் வாழ்வியல்

இறைவனின் பலவடிவக் கூறுகளையும், மானுட வாழ்வியலுக்கு ஏற்புடையவனவாகத் தெளிவுப்படுத்தி, சரியை, கிரியை, யோகம், இளமை நிலையாமை, யாக்கை, நிலையாமை, செல்வ நிலையாமை, தானச்சிறப்பு, அன்புடைமை, பொறையுடைமை, நடுவுநிலைமை, கொல்லாமை, பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, பெரியாரைத் துணைக்கோடல், அட்டமாசித்தி, கலைநிலை, காலச் சக்கரம், என்றத் தலைப்புகளினூடே சிவத்தினையும், சிவத்தால் வகுத்தளிக்கப்பட்டு வாழும் முறைமைகளையும் முப்பாலின் வழியே முக்கண்ணன் அருட்திறத்தை தெளிவுப்படுத்துவதைக் காண முடிகிறது, அவை முறையே

**"விண்ணின்று நீர்விழின் மீண்டும் மண் ஆனாற்போல்"** (மே.நூ.ப 789-பா 316)

என யாக்கை நிலையாமையை தெளிவாக்கி இளமை நிலையாமையை

**"குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்**
**விழக்கண்டும் தேறார் வியன் உலகோரே".** (மே.நூ.ப 791-பா 351)

என்று விளக்கி, அறமே வாழ்வியலுக்கு உகந்தது என்பதை,

**"இன்பம் அது கண்டும் ஈகிலர் பேதைகள்**
**அன்பு இலார் சிந்தை, ஆறாம் அறிவாரே"** (மே.நூ.ப 795-பா 434)

தெளிவுப்படுத்துகிறார். அன்பினில் கலந்த சிவமே அன்பு என்பதை,

**"அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா**
**ரன்பே சிவமாவ தாரு மறிகிலா"** (மே.நூ.ப 796-பா 437)

என அன்பை வாழ்வியலாக்கி மகிழ்வதைக் காணமுடிகிறது. அன்பினைத் தெளிவித்து குற்றமில்லாத தூய அன்பினில் மட்டுமே ஈசனைக் காண முடியும் என்ற வாழ்வியலை,

**"சித்தர்கள் என்றும் செறிந்து அறிவார்இல்லை,**
**பத்திமையாலே பணிந்து அடியார் தொழ**
**முத்தி கொடுத்து, அவர் முன்பு நின்றானே"**

என்னும் பத்தியாகிய அன்பினூடே இறைவனைக் கண்டு வாழ்வியலை செம்மையுற வாழ வழிவகுக்கின்றார் திருமூலர். நடுவுநிலைமையில் வாழ்தலே வாதவூரனைக் காணும் அழியா, மரணமில்லாப் பெருவாழ்வின் வழியென்பதை

**"நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்**
**நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்**
**நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்**
**நடுவுநின் றாரொடு நானுநின் றேனே"** (மே.நூ.ப 801-பா 541)

**என்றும்**,

**"வாறே சிவாயநம, ச்சிவாயந**
**வாறே செபிக்கில், வரும்பேர் பிறப்பு இல்லை**
**வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்"** (மே.நூ.ப 819-பா)

என்றும் உள்ளத்தில் சிவனை நினைந்துருகி வாழ்வது ஈசனின் திருவருட்காட்சி யென்பதை திருமூலர் தெளிவாக்குகிறார்.

**"நகாரம் மகாரம் சிகாரம் நடுவாங்**
**வகாரம் இரண்டும் வளியுடன் கூடி**
**ஓகாரம் முதல்கொண்டு ஒருகால் உரைக்க**
**மகார முதல்வன் மனத்தகத் தானே"** (மே.நூ.ப 823-பா 967)

'நமச்சிவாய ஓம்' என்பதை ஒருமுறை உரைத்தால் ஆடவல்லானின் திருவருட் பேறு கிட்டும் எனத் தெளிவுப்படுத்தி உலகாயத வாழ்வியலை இறைவனின் அருட்திறத்தோடு செம்மையாக வாழ வழியமைத்துத் தருகிறது திருமந்திரம்.

## வாழ்வுக்கு காற்றும் - சத்தியும்

நாம் சுவாசிக்கும் காற்றினில், உயிரினில் கலந்த "சிவனை" அறிவிய லுகத்திற்கு முன்னமே உயிர்க்காற்று, உயிர்ச்சத்து, அகவொளி, புறஒளி, குண்டலினிசத்தி, பெயயோகம், மூச்சுப்பயிற்சி, மூச்சுஇயக்கம், மூச்சுஅடக்குதல், புலனடக்கம், ஆறு, உரு, அற்றதியானம், உள்ளோசை, சமாதி, உள்ளிட்டக் கூறுபாடுகளோடு "நமச்சிவாய" என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை இழைத்து அதை கற்பக விருட்சமாகத் தருகிறார் திருமூலர் அவை

**"கொட்டிப் பிராணன் அபானனும் கும்பித்து**
**நட்டம் இருக்க நமன் இல்லை தானே"** (மே.நூ.ப 803-பா 567)

என்றும்,

**"பிராணன் மனத்தொடும் பேராது அங்கிப்**
**பிராணன் இருக்கின் பிறப்பு இறப்பு இல்லை"**

என உயிர் வளியின் தன்மையை சிவசத்தியோடு கலந்து விளக்குகிறார் திருமூலர். அட்டமாசித்தி, சித்திப்பேறு அடைந்திட,

**"அணிந்து எண் திசையினும் அட்டமாசித்தி**
**தணிந்து எண் திசைச்சென்று தாபித்தவாறே "** (மே.நூ.ப 806-பா 633)

என்று பாடுவதின் மூலம் பரம்பொருளான பரமனை நினைந்து, பரமனின் பராசத்தியான சிகாசத்தியை நினைந்து உயிர்வளியை சுவாசிப்பவர்கள் சிவசக்தியோடு சித்தி அடைவர் **என்பதை**,

**"தெரிதரு சாம்பவி கேசரி சேரப் பெரிய சிவகதி பேறு எட்டாம் சித்தியே"**
(மே.நூ.ப 806-பா 635)

எனத் தெளிவாக்குகிறது திருமந்திரம்.

## முடிவுரை

திருமந்திரத் திருவருட்காட்சியினை பலவாறு விளக்கும் திருமூலர், ஆடவல்லானின் அருட்திறத்தையும் அகிலாண்ட நாயகியின் திருவருட் பேற்றினையும் விளக்கும்போது சிவத்தொண்டனாக, உளவியல், மருத்துவம், மெய்ஞானம் என வாழ்வியல் கூறுகளை

வள்ளுவன் வழி நின்று தெளிவாக்கி, தமிழ் அந்தனனாக நின்று திருவைந்தெழுத்தை விளக்குவதை உணர முடிகிறது.

உலகளாவிய கற்றுணர்ந்த சைவத்தாரும், நாளும் இடர்களைந்து வாழும் வாழ்வையும், அவ்வாழ்வினூடே இறைத்துவத்தோடு ஒன்றிய மனம், மொழி, எழுத்து, சித்து, வித்தை, மாயா நிலைகளை வெல்லும் சிவத்துதி, சிவனோடு ஐக்கியம், உள்ளிட்ட இறைத்துவ உணர்தல், வேண்டுதல், பின்பற்றி உச்சரித்தல் என்னும் முறைமையை உலகிற்கு உணர்த்துகிறது.

திருமந்திரம், திருமூலரின் திருப்பாடல்கள் இறைவனை துதிக்கும்முறை, யோகம், தவம், ஆழ்மன ஒருமைப்பாடு, எழுத்துக்களின் அமைவு செபித்தல், இறைவனோடு ஒன்றுதல், வாழ்வியல் தத்துவம், கூடுவிட்டு கூடுபாயும் நிகழ்வுகள் யாவும், "நமச்சிவாய" என்னும் எழுத்துருவில் திருவருட்காட்சித் தந்து அன்பின் வடிவினாக (சிவன்) இறைவன் திருக்காட்சியளிப்பதை இக்கட்டுரையின் வழியே உணர்ந்துக் கொள்ளும் முடிபாகும்.

## References


[1] Sa.Ve.Subramaniyan, Panniru Thirumurai First Edition, Manivasagar Noolagam (2015), Chennai 600 108, India

[2] R. Devira, (2007) Tamil Encyclopedia First Edition, Nandhini Pathipagam, Chennai-101, India.

[3] C. Balasubramaniyan, (1959) Histroty of Tamil Literature, Meyyappan Pathippagam, CHidambaram 608 000, India.

[4] Balur Th. Kannappar, (2012) Tamil Literature Dictionary, First Edition, Poompuhar Publications, Chennai-600 108, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


## About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The authors 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License